# நம்மாழ்வார் அருளிச் செய்த திருவாய்மொழி பத்தாம் பத்து

## மூன்றாம் திருவாய்மொழி - வேய்மருதோள்
## தலைவி தலைவனது பிரிவுக்கு இரங்கிய பாசுரத்தாலே, இன்னும் பரமபதம் அருளாமையால், 'என்னை இந்தப் பூமியிலே வைத்து விடுவனோ' என்று சங்கித்து, திருமால் தெளிவிக்கத் தெளிதல்

** வேய் மரு தோள் இணை மெலியும் ஆலோ! *
மெலிவும் என் தனிமையும் யாதும் நோக்கா *
காமரு குயில்களும் கூவும் ஆலோ! *
கண மயில் அவை கலந்து ஆலும் ஆலோ! **
ஆ மருவு இன நிரை மேய்க்க நீ போக்கு *
ஒரு பகல் ஆயிரம் ஊழி ஆலோ! *
தாமரைக் கண்கள் கொண்டு ஈர்தி ஆலோ! *
தகவிலை தகவிலையே நீ கண்ணா! 1

தகவிலை தகவிலையே நீ கண்ணா! *
தட முலை புணர் தொறும் புணர்ச்சிக்கு ஆரா *
சுக வெள்ளம் விசும்பு இறந்து அறிவை மூழ்க்கச்
சூழ்ந்து * அது கனவென நீங்கி ஆங்கே **
அக உயிர் அகம் அகம் தோறும் உள் புக்கு *
ஆவியின் பரம் அல்ல வேட்கை அந்தோ! *
மிக மிக இனி உன்னைப் பிரிவை ஆமால் *
வீவ நின் பசு நிரை மேய்க்கப் போக்கே 2

வீவன் நின் பசு நிரை மேய்க்கப் போக்கு *
வெவ்வுயிர் கொண்டு எனது ஆவி வேமால் *
யாவரும் துணை இல்லை யான் இருந்து *
உன் அஞ்சன மேனியை ஆட்டம் காணேன் **
போவது அன்று ஒரு பகல் நீ அகன்றால் *
பொருகயற் கண் இணை நீரும் நில்லா *
சாவது இவ்வாய்க் குலத்து ஆய்ச்சியோமாய்ப்
பிறந்த * இத்தொழுத்தையோம் தனிமை தானே 3

தொழுத்தையோம் தனிமையும் துணை பிரிந்தார்
துயரமும் * நினைகிலை கோவிந்தா! * நின்
தொழுத் தனில் பசுக்களையே விரும்பித் *
துறந்து எம்மை இட்டு அவை மேய்க்கப் போதி **
பழுத்த நல் அமுதின் இன் சாற்று வெள்ளம் *
பாவியேன் மனம் அகம் தோறும் உள் புக்கு
அழுத்த * நின் செங்கனி வாயின் கள்வப்
பணி மொழி * நினைதொறும் ஆவி வேமால் 4

பணி மொழி நினைதொறும் ஆவி வேமால் *
பகல் நிரை மேய்க்கிய போய கண்ணா! *
பிணி அவிழ் மல்லிகை வாடை தூவப் *
பெரு மத மாலையும் வந்தின்று ஆலோ! **
மணி மிகு மார்வினின் முல்லைப் போது * என்
வன முலை கமழ்வித்து உன் வாய் அமுதம் தந்து *
அணி மிகு தாமரைக் கையை அந்தோ! *
அடிச்சியோம் தலை மிசை நீ அணியாய் 5

அடிச்சியோம் தலை மிசை நீ அணியாய் *
ஆழி அங்கண்ணா! உன் கோலப் பாதம் *
பிடித்தது நடு உனக்கு அரிவையரும்
பலர் * அது நிற்க எம் பெண்மை ஆற்றோம் *
வடித் தடங்கண் இணை நீரும் நில்லா *
மனமும் நில்லா எமக்கு அது தன்னாலே *
வெடிப்பு நின் பசு நிரை மேய்க்கப் போக்கு *
வேம் எமது உயிர் அழல் மெழுகில் உக்கே 6

வேம் எமது உயிர் அழல் மெழுகில் உக்கு *
வெள் வளை மேகலை கழன்று வீழ *
தூ மலர்க் கண் இணை முத்தம் சோரத் *
துணை முலை பயந்து என தோள்கள் வாட *
மா மணி வண்ணா! உன் செங்கமல
வண்ண * மென்மலர் அடி நோவ நீ போய் *
ஆ மகிழ்ந்து உகந்து அவை மேய்க்கின்று உன்னோடு *
அசுரர்கள் தலைப்பெய்யில் யவன் கொல் ஆங்கே? 7

அசுரர்கள் தலைப் பெய்யில் யவன் கொல் ஆங்கு என்று *
ஆழும் என் ஆர் உயிர் ஆன் பின் போகேல் *
கசிகையும் வேட்கையும் உள் கலந்து *
கலவியும் நலியும் என் கைகழியேல் **
வசி செய் உன் தாமரைக் கண்ணும் வாயும் *
கைகளும் பீதக உடையும் காட்டி *
ஒசி செய் நுண் இடை இள ஆய்ச்சியர் *
நீ உகக்கு நல்லவரொடும் உழிதராயே 8

உகக்கு நல்லவரொடும் உழிதந்து *
உன்தன் திரு உள்ளம் இடர் கெடுந்தோறும் * நாங்கள்
வியக்க இன்புறுதும் எம் பெண்மை ஆற்றோம் *
எம்பெருமான்! பசு மேய்க்கப் போகேல் **
மிகப் பல அசுரர்கள் வேண்டு உருவம்
கொண்டு * நின்று உழிதருவர் கஞ்சன் ஏவ *
அகப்படில் அவரொடும் நின்னொடு ஆங்கே *
அவத்தங்கள் விளையும் என் சொற்கொள் அந்தோ! 9

அவத்தங்கள் விளையும் என் சொற்கொள் அந்தோ! *
அசுரர்கள் வன்கையர் கஞ்சன் ஏவ *
தவத்தவர் மறுக நின்று உழிதருவர் *
தனிமையும் பெரிது உனக்கு இராமனையும்
உவர்த்தலை ** உடன் திரிகிலையும் என்றென்று
ஊடுற * என்னுடை ஆவி வேமால் *
திவத்திலும் பசு நிரை மேய்ப்பு உவத்தி *
செங்கனிவாய் எங்கள் ஆயர் தேவே! 10

** செங்கனிவாய் எங்கள் ஆயர் தேவு *
அத்திருவடி திருவடி மேல் * பொருநல்
சங்கணி துறைவன் வண் தென் குருகூர் *
வண் சடகோபன் சொல் ஆயிரத்துள் **
மங்கையர் ஆய்ச்சியர் ஆய்ந்த மாலை *
அவனொடும் பிரிவதற்கு இரங்கி * தையல்
அங்கு அவன் பசு நிரை மேய்ப்பு ஒழிப்பான்
உரைத்தன * இவையும் பத்து அவற்றின் சார்வே 11

**ஆழ்வார் திருவடிகளே சரணம்**

---